**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 8 /2017

PW-2 02-08-2024

| | |
|---|---|
| Name | முத்துராஜ் |
| Father's/Husband's Name | ராமலிங்கம் |
| Village | எட்டயபுரம் |
| Taluk | எட்டயபுரம் |
| Caste | _ |
| Calling | எம்ப்ராய்டிங் |
| Religion | _ |
| Age | 39 |

(Accused absent. Petition filed and allowed)

**முதல்விசாரணை**

1) நான் எட்டயபுரத்தில் வசிக்கிறேன். நான் எம்ப்ராய்டிங் வேலை செய்து வருகிறேன்.புகார்தாரரை தெரியும். இறந்துபோன வீரபுத்திரன் எனது தெருக்காரர். எதிரியை தெரியாது. விபத்து எப்படி ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி அனுமதி கேட்டு அனுமதி**
**வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கடந்த 25.10.2016 தேதி இரவு சுமார் 8.35 மணியளவில் நானும் பூமிநாதனும் இருசக்கர வாகனத்தில் கோவில்பட்டியில் இருந்து எட்டயபுரம் நோக்கி சென்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். எங்களுக்கு முன்னால் எதிரி அவரது இருசக்கர வாகனத்தில் இறந்துபோன வீரபுத்திரனை பின்னால் அமர வைத்து சென்றுகொண்டிருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது.

2) 8.40 மணியளவில் எட்டயபுரம் பாரதியார் பாலிடெக்னிக் அருகே எதிரி அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாலும் வாகனத்தை ஓட்டியதால் இருவரும் நிலைய தடுமாறி கீழே விழுந்து அவர்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

3) மேல்சிகிச்சைக்காக வீரபுத்திரன் தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்ட அவர் இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன் என்றால் சரிதான். எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.